**வவுனியா நகர சபை**

---------------------------------

**வவுனியா மாவட்டம்**

----------------------------------

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2016 ஆம் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2017 மார்ச் 31 இல் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2016 மார்ச் 31 இல் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. 2016 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 செப்டம்பர் 13 இல் சபையின் செயலாளருக்கு வழங்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து வவுனியா நகரசபையின் 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டு குறைபாடுகள் அவதானிக்கப்பட்டுள்ளன.

அ) நன்கொடையாகப் பெற்ற நகரசபைக்குச் சொந்தமான 31 வாகனங்கள் சபையின் பெயருக்கு உரிமை மாற்றம் செய்யப்பட்டிருக்காததுடன் அவற்றின் பெறுமதிகளும் கணக்குக்குக் கொண்டுவரப்பட்டிருக்காமையினால் மோட்டார் வாகனங்களின் பெறுமதி கணக்குகளில் குறைவாகக் கணக்கிடப்பட்டுள்ளது.

ஆ) நன்கொடையாக வழங்கப்பட்ட நகரசபைக்குச் சொந்தமான 16 வாகனங்கள் சபையின் பெயருக்கு உரிமை மாற்றம் செய்யப்பட்டிருந்தும் வாகனங்களின் பெறுமதி மதிப்பிடப்பட்டு கணக்கிற்கு உள்ளடக்கப்படாமையால் மோட்டார் வாகனங்களின் பெறுமதி கணக்குகளில் குறைத்து கணக்கிடப்பட்டுள்ளது.

இ) 2012 வருடம் முதல் கணக்காய்வு வருடம் வரை குடியிருப்பு சிறுவர் பூங்கா வெளியார் நிறுவனமொன்றிற்கு குத்தகைக்கு வழங்கியதன் பேரில் கிடைக்க வேண்டிய ரூபா 250,000 வருமானம் கணக்கிற்கு கொண்டு வரப்படாமையினால் திரண்டநிதி கணக்குகளில் குறைவாக கணக்கிடப்பட்டள்ளது.

#### 1.3.2 ஆவணச் சான்றுகள் இன்மை

தேவையான சான்றுகள் இல்லாமையின் காரணமாக ரூபா 524,414 பெறுமதியான 17 கொடுக்கல்வாங்கல்களை கணக்காய்வில் திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்தவோ அல்லது ஏற்றுக் கொள்ளவோ முடியாதிருந்தது.

#### 1.3.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| **அ. சட்டங்கள் மற்றும் விதிகள்** | |
| நகரசபைகள் கட்டளைச்சட்டம் பிரிவு 44(2) | நகர சபைகள் ஸ்தாபிக்கப்பட்டு 3 வருடங்களுக்குள் சபைகளின் வீதிகள் மற்றும் ஒழுங்கைகளின் பட்டியல்கள் அரச வர்த்தகமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கவில்லை |
| அத்தியாயம் III பிரிவு 54(1) | வீதவரி சம்பந்தமாக வீதவரி அட்டவணை நவம்பர் 15 ஆம் திகதிக்கு முன் செயலாளாரிடம் கையளிக்கப்பட்டு டிசம்பர் 15 ஆம் திகதிக்கு முன் கொடுப்பனவுகள் செய்யப்பட்டு பூரணப்படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| அத்தியாயம் VII பிரிவு 171 | காசுப் புத்தகம் ஏனைய பதிவேடுகள் செயலாளரினால் நாளாந்தம் செவ்வை பார்க்கப்பட்டிருக்கவில்லை. |
| **(ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை** | |
| நிதிப்பிரமாணம் 316(2) | நாளாந்த காசு மீதிகள் காவற்கட்டுகாப்பில் வைக்கப்படும் பொருட்களுக்கான பதிவேடுகள் பேணப்பட்டிருக்கவில்லை. |
| நிதிப்பிரமாணம் 381(3) | காசோலைகளிற் கையொப்பமிடுவதற்கு அதிகாரம் வழங்கப்பட்ட உத்தியோகத்தரினால் பிணை செலுத்தப்பட்டிருக்கவில்லை. |
| நிதிப்பிரமாணம் 751(2) | சபையிலுள்ள மின் இணைப்பு பொருட்களுக்கான பொருட்பதிவேடு தனியாக பேணப்பட்டு பதிவுகள் செய்யப்பட்டிருக்கவில்லை. |
| **இ. சுற்று நிருபங்கள்** | |
| பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் சுற்று நிருபத்தின் 10 ஒக்டோபர் 1990 ஆம் திகதிய 41/90 ஆம் இலக்கம் | சபையின் வாகனங்களிற்கு எரிபொருள் நுகர்வுப் பரீட்சிப்பு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

### 1.3.4 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

அ. சபையினால் கடந்த வருடங்களில் இடம் மாற்றம் பெற்றுச் சென்ற அலுவலர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய பதவியினர் கடன் நிலுவை ரூபா 589,665 அறவீடு செய்வதற்கு சட்டரீதியானதும் ஆக்கபூர்வமானதுமான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

ஆ. பாரதி சனசமூகநிலையம் 1 வது 2 வது மற்றும் இறுதி கொடுப்பனவு ரூபா 67,463 பிடிபணங்கள் உரிய ஒப்பந்தகாரருக்கு வழங்கப்படாது 2015 ஆம் ஆண்டிலிருந்து வைப்புக் கணக்கில் உள்ளது.

இ. பல வருடங்களாக காணப்படும் ரூபா 10,196,715 பொறுப்புகள், கடனாளிகளின் நிலுவைகள் சீர் செய்வதற்கு உரிய ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி மீளாய்வாண்டிற்கான சபையினுடைய நிதிப்பெறுபேறுகள் தேறிய மிகையாக ரூபா 37,569,664 விளைந்திருப்பதுடன் நேரொப்பான முன்னைய ஆண்டின் செயற்பாட்டின் தேறிய மிகையாக ரூபா 10,846,353 விளைந்திருந்தது. இது மீளாய்வாண்டுக்கான இறுதி நிதிப்பெறுபேறுகள் ரூபா 26,723,311 ஆல் அதிகரித்துள்ளமையைக் காட்டுகின்றது.

### 2.2 வருமான முகாமைத்துவம்

### 2.2.1 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட அட்டவணைக்கமைய நகரசபை அதிகார எல்லைக்குள் வீதவரிகள் அறவிடப்பட வேண்டியதிலும் விட அறவிடப்பட்ட வீதவரி பணம் கீழ் மட்டத்தில் இடம் பெற்றதனால் வருடாந்த வீதவரி நிலுவைகளில் விருத்தியேற்பட்டு காணப்படுகிறது. விபரம் வருமாறு.

| வருடம் | நிலுவை(ரூபா) |
|---|---|
| 2014.12.31 | 34,599,229 |
| 2015.12.31 | 38,197,727 |
| 2016.12.31 | 45,217,168 |

### 2.2.2 வீதவரிகள்

கடந்த 6 வருடங்களுக்கு மேலாக ஆதனவரி மீள மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டிருக்காமையால் வீத வரி அறவீடு குறைவாக காணப்படுகின்றது.

### 2.2.3 வாடகைகள்

அ) இவ்வாண்டிலும் கடந்த ஆண்டுகளிலுமாக வாடகைகள் ரூபா 4,837,853 சபையினால் அறவிடப்படாமல் உள்ளது.

ஆ) கடை வாடகைகள் அறவிடப்பட்டு வரும் 82 கடை உரிமையாளரிடம் வழங்கப்பட்ட திகதியிலிருந்து ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கவில்லை.

இ) கடை வாடகைகள் அறவிடப்பட்டு வரும் 276 கடை உரிமையாளர்களினால் மீள ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கவில்லை.

ஈ) 2009 வருடத்திற்கு பின் வியாபார அனுமதிப்பத்திரக்கட்டணம் திருத்தம் செய்யப்பட்டு அறவிடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்காமையின் அடிப்படையில் வருமானத்தை மேம்படுத்தவுள்ள வாய்ப்புகள் இழக்கப்பட்டுள்ளன.

உ) சபைக்கு சொந்தமான கடைகள் பல வருடங்களுக்கு முன்பு கேள்வி கோரல் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட 265 ஒப்பந்தக்காரர்கள் சிலர் குறித்த கடைகளை வேறு நபர்களுக்கு விற்பனை செய்ததுடன் சிலர் கூடுதலான வாடகைக்கு கொடுத்திருந்தமையினால் சபைக்கு கிடைக்க வேண்டிய ரூபா 61,800,000 தொகை கிடைக்காமல் உள்ளது.

### 2.2.4 நீதிமன்றத் தண்டப்பணங்கள் மற்றும் முத்திரைக் கட்டணங்கள்

**நீதிமன்றத் தண்டப்பணங்கள்**

2016 ஆம் ஆண்டின் நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 5,216,117 சபையினால் அறவிடப்படாது நிலுவையாக உள்ளது.

**முத்திரைக் கட்டணங்கள்**

காணிப்பதிவாளர் நாயகத்திடமிருந்து ரூபா 17,341,613 பெறுமதியான முத்திரைத்தீர்வைக் கட்டணங்கள் மீளாய்வாண்டிலும் முன்னைய காலங்களிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 2.2.5 களியாட்ட வரி

இவ்வாண்டிலும் கடந்த ஆண்டுகளிலுமான களியாட்டவரி ரூபா 1,138,190 சபையினால் அறவிடப்படாமல் உள்ளது.

### 2.3 முகாமைத்துவ செயற்திறனின்மை

**அ.** நன்கொடையாகப் பெற்ற 10 வாகனங்கள் பதிவுப் புத்தகம் அற்ற நிலையில் காணப்படுகின்றது.

**ஆ.** சபையில் காணப்படும் 12 உழவு இயந்திரங்களின் மானிவாசிப்பு பழுதடைந்த நிலையில்காணப்படுகின்றது.

**இ.** 2016ம் ஆண்டில் பெயர் மாற்றுவதற்கு அனுமதி பெற்றுக்கொள்வதற்காக சபையிடம் கையளிக்கப்பட்ட 97 விண்ணப்பங்களில் 70 விண்ணப்பங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதுடன் 27 விண்ணப்பங்களுக்கு அனுமதி வழங்கப்படாதுள்ளது.

**ஈ.** 2016 ஆம் ஆண்டில் கட்டட அனுமதி பெற்றுக்கொள்வதற்காகச் சபையிடம் கையளிக்கப்பட்ட 45 கட்டட அனுமதி விண்ணப்பங்களில் 31 விண்ணப்பங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதுடன் 14 விண்ணப்பங்களுக்கு அனுமதி வழங்கப்படாது காணப்படுகின்றது.

**உ.** நூலகக் கட்டட நிதிய வைப்புகள் ரூபா 671,373 உரிய நோக்கங்களுக்கு பயன்படுத்தப்படாது காணப்படுகின்றது.

**ஊ.** 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கை 183 ஆக இருந்தபோதும் உள்ளபடியான பதவியினர் எண்ணிக்கை 168 ஆக உள்ளதுடன பற்றாக்குறை 16 ஏற்பட்டமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

**எ.** சபை செயலாளருக்கான நிரந்தரமான அறை பாவிக்கப்படாதிருப்பதுடன் வருடாந்தம் வெவ்வேறு அறையினை சபை நிதியினைப் பயன்படுத்தி புனரமைப்பு செய்து சபை

செயலாளர்கள் பயன்படுத்துகின்றனர். இதன்படி ரூபா 152,300 செலவில் 08.02.2016 நிர்மாணிக்கப்பட்ட செயலாளர் அறையானது குறித்த செயலாளர் இடமாற்றம் பெற்று சென்றதன் காரணமாக புதிதாக பொறுப்பேற்ற செயலாளரினால் அவ்வறை பயன்படுத்தப்படாததுடன் வேறு அறையினை செயலாளர் அறையாக பயன்படுத்துகின்றமையால் குறித்த அறையின் பொருத்துகள் அனைத்தும் கழற்றப்பட்டு தற்போது அப்பகுதி வருமானப் பகுதியாக பயன்படுத்துகின்றமை அவதானிக்கப்பட்டது.

**ஏ.** பெறுகை வழிகாட்டி நெறிகள் 2006 இன்படி பிரிவு 8.9.1 (ஆ) இன் பிரகாரம் 500,000 ரூபாவினை விஞ்சுகின்ற எவையேனும் பண்டங்களுக்காக அல்லது சேவைகளுக்காக ஒப்பந்தம் ஒன்று ஏற்படுத்தல் வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்தும் சபை நிதியில் ரூபா 1,713,000 கொள்வனவு செய்யப்பட்ட விளையாட்டு உபகரணங்களுக்கு ஒப்பந்தம் ஒன்றும் ஏற்படுத்தப்படவில்லை.

**ஐ.** மேற்குறிப்பிட்ட வேலையின் ஒப்பந்தம் மற்றும் மதிப்பீட்டின் வேலைத்திட்ட விடய இலக்கம் 166 இன்படி மணல் நிரப்புதல் 12 Cube ரூபா 88,800 பெறுமதியிடப்பட்டு கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்த போதும் பௌதீக கணக்காய்வின் போது குறிப்பிட்ட பகுதியில் 7.294 உரடிந மணல் மாத்திரமே போடப்பட்டிருந்தது இதன்படி ரூபா 53,976 மேலதீக கொடுப்பனவாக வழங்கப்பட்டிருந்தது.

**ஒ.** மேற்குறிப்பிட்ட வேலையின் ஒப்பந்தம் மற்றும் உடன்படிக்கையின் பிரகாரம் மேற்படி நிர்மாணத்தின் வேலைத்திட்ட விடய இலக்கம் D 13 இன் பிரகாரம் பழைய உபகரண திருத்தத்திற்காக ஒப்பந்தக்காரருக்கு ரூபா 178,043 செலுத்தியிருந்த போதிலும் அவ்விளையாட்டு உபகரணங்கள் கணக்காய்வின் போது பூங்காவில் காணப்படவில்லை.

**ஓ.** சபையின் நூலகத்தில் ரூபா 26,584 பெறுமதியான 162 நூல்கள் தவறவிடப்பட்டிருந்ததுடன் அதனை மீளவும் பெற்றுக்கொள்வற்கு ஆக்க பூர்வமான நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

## 2.4 தொழிற்பாட்டு வினைத்திறனின்மை

**அ.** மீளாய்வாண்டின் வரவு செலவு திட்டத்தில் காணப்படும் ரூபா 7,540,000 வேலைத்திட்டங்கள் முற்றாக கைவிடப்பட்டுள்ளன.

**ஆ.** நகரசபைக்குட்பட்ட பிரதேசத்தில் அனுமதியற்ற கட்டடங்கள் தொடர்பாக சட்டரீதியாக அவற்றை அகற்றுவதற்கு நகர அபிவிருத்தி அதிகார சபையினால் குறிப்பிட்ட சபைக்கு இற்றைவரை அதிகாரம் வழங்கப்பட்டிருக்கவில்லை. பௌதீக பரீட்சிப்பின் போது இனங்காணப்பட்ட 14 இடங்களில் 149 அதிகாரமளிக்கப்படாத நிர்மாணங்கள் மேற்கொள்ளப்பட்டதோடு நிர்மாணப்பணிகள் நகர அபிவிருத்தி அதிகாரசபையின் 1982 இலக்கம் 4 நகர அபிவிருத்தி திருத்தப்பட்ட சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய அதிகாரமளிக்கப்படாத நிர்மாணப்பணிகளை அகற்றுவதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**இ.** நகர சபை எல்லையில் அமைந்துள்ள 5 தொலைத்தொடர்பு நிறுவனங்களினால் பொருத்தப்பட்ட தொலைத்தொடர்பு கோபுரங்களின் அளவு மற்றும் அவற்றின் உயரம் என்பவற்றைக் கவனத்தில் கொண்டு ஒப்பந்தம் செய்யப்பட்டு பெறுமதி அந் நிறுவனங்களிடமிருந்து இதுவரை அறவிடப்படவில்லை.

## 2.5 ஒப்பந்த நிர்வாகம்

சபையினால் ரூபா 9,768,256 செலவில் புனர்நிர்மானம் செய்யப்பட்ட நகரசபைப் பொதுப் பூங்கா தொடர்பான குறைபாடுகள் வருமாறு.

அ. ஒப்பந்தம் மற்றும் உடன்படிக்கையின் பிரகாரம் மேற்படி நிர்மாணத்தின் வேலைத்திட்ட விடய இலக்கம் D1, D2 பிரகாரம் பூங்காவின் நிலத்தினை மட்டப்படுத்தல் மற்றும் மண்நிரப்புதலுக்காக ஒப்பந்தகாரருக்கு ரூபா 777,200 கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்த போதும் ஒழுங்கான முறையில் மண் நிரப்பி நிலத்தினை மட்டுப்படுத்தப்படாததன் காரணமாக மழை நீர் தேங்கி நிற்கக்கூடியதாகவும் நிலமானது சமநிலையற்ற நிலையிலும் காணப்படுகின்றது.

ஆ. ஒப்பந்தம் மற்றும் உடன்படிக்கையின் பிரகாரம் மேற்படி நிர்மாணத்தின் வேலைத்திட்ட விடய இலக்கம் D7 இற்கு அமைய நீர்வீழ்ச்சி அமைப்பு ஒப்பந்தம் மற்றும் உடன்படிக்கையின் படி ரூபா 200,000 பைபர் கிளாஸ் மூலம் மேற்கொள்ளப்பட வேண்டும் என காணப்பட்ட போதும் குறிப்பிட்ட நீர்வீழ்ச்சி அமைப்பு ஆனது முழுமையாக சீமெந்தின் மூலம் ரூபா 199,995 பெறுமதியில் புனர்நிர்மாணம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

இ. ஒப்பந்தம் மற்றும் உடன்படிக்கையின் பிரகாரம் மேற்படி நிர்மாணத்தின் வேலைத்திட்ட விடய இலக்கம் D 10 இன் பிரகாரம் கதிரை மேசை தொகுப்பிற்கு ரூபா 125,000 ஒப்பந்தக்காரருக்கு செலுத்தப்பட்டிருந்த போதிலும் வேலைகள் ஒப்பந்திற்கு அமைவான எண்ணிக்கையில் நிர்மாணிக்கப்படவில்லை.

ஈ. ஒப்பந்தம் மற்றும் உடன்படிக்கையின் பிரகாரம் மேற்படி நிர்மாணத்தின் வேலைத்திட்ட விடய இலக்கம் D 04 இன் பிரகாரம் ரூபா 493,080 செலவில் நிர்மாணிக்கப்பட்ட உள்ளக வீதியானது ஒழுங்கான முறையில் முடிவுறுத்தப்படாததுடன் பல இடங்களில் வெடிப்புகளும் உடைவுகளும் காணப்படுகின்றது.

உ. ஒப்பந்தம் மற்றும் உடன்படிக்கையின் பிரகாரம் மேற்படி நிர்மாணத்தின் வேலைத்திட்ட விடய இலக்கம் D 05 இன் பிரகாரம் புற்கள் பதிப்பதற்காக ஒப்பந்தகாரருக்கு ரூபா 36,457 செலுத்தப்பட்டிருந்த போதும் குறிப்பிட்ட புற்கள் பதித்தல் ஆனது ஒழுங்கான முறையில் மேற்கொள்ளாததுடன் பல இடங்களில் புற்கள் பதிக்கப்படாமல் காணப்படுகின்றது.

ஊ. சபை நிதியில் ரூபா 1,713,000 பெறுமதியில் கொள்வனவு செய்யப்பட்டு பூங்காவிற்குள் பொருத்தப்பட்ட பைபர் விளையாட்டு உபகரணங்கள் உரிய தரத்தில் இல்லாததன் காரணத்தால் வெடிப்படைந்து காணப்படுவதுடன் விரைவில் அவை உடையும் தன்மை உடையதாக காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது.

எ. ஆநசசைபழ சழரனெ விளையாட்டு உபகரணங்கள் திருத்தத்திற்கு பயன்படுத்திய ரூபா 75,935 பெறுமதியான 03 Phase மின் உபகரணத்திற்காக ஒப்படைக்கப்பட்ட பற்றுச்சீட்டானது பொலியாக தயாரிக்கப்பட்டு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

## 2.6 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 2.6.1 வருடாந்த பெறுகைத் திட்டம்

இவ்வாண்டுக்கான பெறுகைத்திட்டத்தில் பெறுகை தீர்மானம் மேற்கொண்ட திகதி, தீர்மானத்தை மேற்கொண்ட உறுப்பினர் பெயர், பதவி பெறுகைத் தீர்மானத்தின் இலக்கம், பெறுகைத்தீர்மானத்தை உறுதிப்படுத்திய பிரதி போன்றன சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.6.2 உள்ளகக் கணக்காய்வு

சபையின் நடவடிக்கைகளை வினைத்திறனாக மேற்கொள்வதற்காக உள்ளகக் கணக்காய்வாளர் நியமிக்கப்பட வேண்டும். எனினும் குறித்த சபையில் உள்ளகக்

கணக்காய்வாளர் நியமிக்கப்பட்டுள்ளபோதும் மீளாய்வாண்டிற்கான உள்ளகக் கணக்காய்வு செயற்பாடுகளுக்கான அறிக்கைகள் சீரான முறையில் அனுப்பப்பட்டிருக்கவில்லை.

### 2.6.3 கணக்காய்வு முகாமைத்துவக் குழுக் கூட்டம்

சபையின் செயற்பாடுகளை வினைத்திறனாக மேற்கொள்வதற்கு கணக்காய்வு முகாமைத்துவக் குழுக் கூட்டம் நடாத்தப்பட வேண்டும். எனினும் குறித்த சபையில் மீளாய்வாண்டில் கணக்காய்வு முகாமைத்துவக் குழுக் கூட்டம் நடைபெற்றிருந்தபோதும் கூட்ட அறிக்கை சீரான முறை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.7 சொத்து முகாமைத்துவம்

**அ) <u>பயன்படுத்தப்படாத சொத்துக்கள்</u>**

சபை களஞ்சிய அறையில் ரூபா 996,792 பெறுமதியான பொருட்கள் 02 வருடங்களுக்கு மேலாக பயன்படுத்தாமல் காணப்படுகின்றது.

**ஆ) <u>வருடாந்த பொருட் கணக்கெடுப்பு</u>**

2016 ஆம் ஆண்டிற்கான வருடாந்த பொருட் கணக்கெடுப்பு 23.03.2017, 24.03.2017, 27.03.2017, 28.03.2017, 29.03.2017 மற்றும் 30.03.2017 ஆம் திகதி சபையினால் மேற்கொள்ளப்பட்டு 05.04.2016 ஆம் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 2.8 திண்மக்கழிவு முகாமைத்துவம்

அ. திண்மக் கழிவுகள் அகற்றுவதற்காக குறிப்பிட்ட நகர சபை எல்லைக்குள் பொருத்தமான இடம் காணப்படாமையால் வவுனியா தமிழ் பிரதேச சபையின் கழிவு அகற்றும் இடத்தில் அவர்களது அனுமதியுடன் திண்மக்கழிவகற்றல் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

ஆ. திண்மக்கழிவுகள் குவிக்கப்படும் இடத்தில் திண்மக்கழிவுகள் தரம் பிரிக்காது ஒன்றாகவே குவிக்கப்படுகின்றது.

இ. திண்மக்கழிவுகளை கொம்போஸ்ட் மற்றும் மீள்சுழற்சிமுறை நடைமுறைபடுத்தப்படவில்லை.

## 3. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் விடயங்களில் விசேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

(அ) வாகன பயன்பாடு

(ஆ) பாதீடு

(இ) வருமான சேகரிப்பு

(ஈ) கடை வாடகை ஒப்பந்தம்

(உ) நிலையான சொத்துக்கள்